பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண்: 654 **நாள் : 06.11.2026**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள், இராயபுரம் மண்டலம், டி.என்.பி.எஸ்.சி. சாலையில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட குழந்தைகள் மையம் மற்றும் பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

இன்று (06.11.2026) மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் திரு. பி. கே. சேகர்பாபு அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, இராயபுரம் மண்டலம், வார்டு-59க்குட்பட்ட டி.என்.பி.எஸ்.சி. சாலையில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் தரைத்தளத்தில் 954 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட குழந்தைகள் மையம் மற்றும் முதல் தளத்தில் 954 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்ட பல்நோக்குக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தனர்.

இதனைத் தொடர்ந்து, குழந்தைகள் மையத்தில் உள்ள குழந்தைகளுக்கு புத்தகப்பை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், மண்டலக்குழுத் தலைவர் திரு. பி. ஸ்ரீராமுலு, மாமன்ற உறுப்பினர்கள் திரு.ல. நவீன், திரு.இசட். ஆசாத், மண்டல அலுவலர் திரு.சத்தியநாராயணன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்

பெருநகர சென்னை மாநகராட்சி